திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது நாங்குநேரி தாலுக்காவில் உள்ள மக்கள் 50 மைல் தூரத்திலுள்ள சேரன்மகாதேவிக்குப் போவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு வள்ளியூரில் ஒரு முனிசிபல் கோர்ட் ஏற்படுத்துவதற்கு இனிமேலாவது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய நீதிமன்றங்களை அமைப்பது என்றால், அதற்குப் போதுமான வழக்குகள் இருக்குமா என்பதைப் பற்றி உயர்நீதிமன்றம் கருத்துத் தெரிவிக்க வேண்டும். இந்த இடத்தில் நீதிமன்றம் ஏற்படுத்துவதைப் பொறுத்த வரை உயர்நீதி மன்றம் அதற்குத் தேவையில்லை என்ற கருத்தைக் கூறியிருக்கிறது.

* 425 வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன் : மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரத்தில் ஒரு சப்-மாஜிஸ்திரேட் கோர்ட் நிறுவுவதற்கான உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால், எப்போது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை.

பகல் 11-30 **திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது நாங்குநேரியிலுள்ள சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் வாரத்திற்கு ஒரு நாள் ராதாபுரத்திற்கு வந்து வழக்குகளை விசாரிக்கிறார்கள். நாங்குநேரியில் அதிகமாக வழக்குகள் இருப்பதினால், கோர்ட்டார் அவர்கள் அங்கே வழக்குகளை விசாரிக்க வேண்டியிருக்கிறது, அடிக்கடி ராதாபுரத்திற்குப் போவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அவ் வட்டார மக்களின் நன்மைக்காக ராதாபுரத்தில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டு அமைப்பதற்கு அரசாங்கம் முற்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : போதுமான வழக்குகள் அந்த நீதிமன்றத்திற்குக் கிடைக்கும் என்று தெரிந்தால் தான், அது பரிசீலனை செய்யப்படும்.

* 426 வினா—திரு. டி. மார்டின் : மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெல்லை மாவட்டத்திலுள்ள சாத்தான்குளத்தில் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட் ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் தற்சமயம் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.